

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற தொழில் வணிக ஆணையரகத்தின் செயல்படுத்தப்படும் அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் தலைமையில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைக்கான அரசு செயலாளர் அர்ச்சனா பட்நாயக், தொழில் வணிக ஆணையர் நிர்மல் ராஜ், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குனர் பிரபாகரன், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல்வகாப், ரூபி மனோகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென் மாவட்டங்களில் 5 சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 123 பயனாளிகளுக்கு ரூபாய் 47.20 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 6.91 கோடி மானியத்துடன் கூடிய கடன் உதவிகளை பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் வழங்கினர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் ரூபாய் 4.72 லட்சத்தில் புதிதாக கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தினை சென்னையிலிருந்து முதல்வர் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து திருப்பத்தூரில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார். இதில் திருப்பத்தூர் ஒன்றியக்குழு தலைவர் சோ.சண்முகவடிவேல், மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆஷாஅஜித், திட்ட இயக்குனர் ராம.சிவராமன், மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என். ரவி உட்பட ஒன்றிய கவுன்சிலர்கள் கலந்து கொண்டார்கள்.

‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# கிராமங்களிலும் நகரங்களுக்கு இணையான நலத் திட்டங்கள்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்!

திண்டுக்கல், ஜுலை 30 -

திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் கிராமங்களில் நகரங்களுக்கு இணையான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது என்று ஊரக வளர்ச்சித் துறை ஐ.பெரியசாமி பெருமிதத்துடன் கூறியதோடு கிராம ஊராட்சிகளில் புதிய தார்சாலை, தெருவிளக்கு வசதி, 100 சதவிகிதம் குடிதண்ணீர் கிடைக்க தமிழக முதல்வர் நடவடிக்கை எடுத்து வருவது பாராட்டுக்குரியது என்றார். ஆத்தூர் ஒன்றியம் அக்கரைப்பட்டி ஆதி திராவிடர் காலனியைச் சேர்ந்த பொதுமக்கள் தங்கள் குடியிருப்பு பகுதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் பெரியசாமி அவர்களிடம் மனு கொடுத்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி ஆத்தூர் தொகுதி பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கியதோடு, உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்புகொண்டு நலத் திட்ட பணிகளை தொடங்க உத்தரவிட்டார். அப்போது கிராம ஊராட்சிகளை சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர்கள் தங்கள் ஊராட்சிகளில் 30 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட நாடகமேடை மற்றும் அங்கன் வாடி மையங்களை புதுப்பித்து தரவேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

பொது மக்களின் கோரிக்கை மனுக்களை பெற்ற ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பெரியசாமி கடந்த இரண்டு வருடங்களாக கூட்டுறவு துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறை மூலமாக நியாய விலைகடைகள், நாடக மேடைகள், தார் சாலைகள், நீர்வழி பாதையில் தரைப் பாலங்கள்கட்டப்பட்டு வருகிறது தமிழகத்தில் கிராம ஊராட்சிகளின் பொற்காலம் இப்போது தான் உள்ளது. அதற்கு காரணம் திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தான் என்றார். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது உள்ளாட்சிதுறை அமைச்சராக இருந்த தளபதியார் அவர்கள் தமிழகம் முழுவதும் சென்று ஊராட்சி நிலைகளை பார்வையிட்டதால் இன்று அவர் முதல்வராக பொறுப்பில் உள்ள போது கிராம ஊராட்சிகளின் முன்னேற்றத்திற்கு அதிகம் முக்கியத்துவம் அளித்து நிதி ஒதுக்கீடு செய்து வருவதால் இன்று கிராமங்கள் தோறும் தார் சாலைகள், தெருவிளக்கு வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் 100 சதவிகிதம் கிடைக் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மண் சாலைகள் கூட முதலமைச்சரின் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் மூலம் தார்சாலைகளாக மாறி வருவதால் கிராமப்புற விவசாயிகள் பயனடைவதோடு, பள்ளிக்குச் செல்லும் மாணவர்களும் சிரமமின்றி பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார்.

தற்போது தொடர் மழை பெய்து வருவதால்பள்ளிகளில் சேதமடைந்த காம்பவுண்டு சுவர்கள் மற்றும் மாணவ மாணவியர்களின் நலன் கருதி கூடுதலாக கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றார். ஆத்தூர் ஒன்றியம் அக்கரைப்பட்டி திராவிடர் காலனியைச் சேர்ந்த பொதுமக்கள் தங்கள் குடியிருப்பு பகுதிக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமியிடம் கோரிக்கை மனு கொடுத்தனர்.

உடனடியாக அமைச்சர் பெரியசாமி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு தாமதம் இல்லாமல் காலனி பகுதி மக்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். அப்பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கட்சி நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டார். தங்களின் கோரிக்கையை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமிக்கு அக்கரைப்பட்டி ஆதிதிராவிடர் காலனி மக்கள் மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் ஆ.நாகராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் மாநகர செயலாளர் ராஜப்பா, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் பாஸ்கரன் ஒன்றிய செயலாளர் திண்டுக்கல் நெடுஞ்செழியன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் நந்தகோபால் அமைச்சரின் உதவியாளர் ஹரிஹரன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் கண்ணன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன் என் பஞ்சம்பட்டி மணி,

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி ஜே.அருண், அய்யம்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் ரேகாஅய்யப்பன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார், மாவட்ட கவுன்சிலர் சுதாசெல்வி ஆரோக்கியமேரி ராஜா, ஒன்றிய குழு உறுப்பினர்கள் வீரக்கல் செல்வி காங்கேயன், வண்ணம்பட்டி காணிக்கசாமி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ் ஆனந்தன், ஜான் பீட்டர் பொன்னு மாந்துரை தி.மு.க. நிர்வாகி அறிவழகன், ஏழாவது தி.மு.க. நிர்வாகிகள் வீரபாண்டியன், நரசிங்கம் மற்றும் நகர தி.மு.க.வைச் சேர்ந்த நந்தி நடராஜன் உட்பட தி.மு.க. நிர்வாகி கள் பலர் உடனிருந்தனர்.



இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் (28.07.2024) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், காரைக்குடி மண்டலம் மூலம் புதிய பேருந்துகள் துவக்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்ட நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், தலைமையேற்று பி.எஸ். 6 ரக புதிய பேருந்துகளை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் இந்நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஏ.என்.இன்பா ரகு, முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் சு.ப.த. திவாகர், காரைக்குடி மண்டல தொ.மு.ச. பேரவை செயலாளர் பச்சைமால் மற்றும் பரமக்குடி சார் ஆட்சியர் செல்வி. அபிலாஷா கௌர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மேலாண் இயக்குநர் மகேந்திர குமார், பரமக்குடி நகர்மன்ற தலைவர் சேது கருணாநிதி, காரைக்குடி மண்டல பொதுமேலாளர் இளங்கோவன், பரமக்குடி வட்டாட்சியர் சாந்தி மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பரமக்குடி கிளை தலைவர் அர்ச்சுனன், செயலாளர் மாரிச்சாமி, பொருளாளர் பாண்டி, நிர்வாகிகள் மருத நாகலிங்கம், பாலசிங்கம், நாகநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை மாவட்டத்தில்

# 123 பயனாளிகளுக்கு மானியத்துடன் ரூ.47.20 கோடி கடன்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினர்!

நெல்லை, ஜுலை 30-

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற தொழில் வணிக ஆணையரகத்தின் செயல்படுத்தப்படும் அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்த ஆய்வு கூட்டம் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென் மாவட்டங்களில் 5 சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 123 பயனாளிகளுக்கு 47.20 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 6. 91 கோடி மானியத்துடன் கூடிய கடன் உதவிகளை பேரவை தலைவர் மு.அப்பாவு,அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் வழங்கினர்.

பின்னர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பின்னர் மூன்று ஆண்டுகளில் சுய தொழில் முனைவோருக்காக 961 கோடியே 58 லட்சம் மானியத்துடன் 2818 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வங்கி கடன் வழங்கப்பட்டுள்ளது.இதன் மூலம் 30 ஆயிரத்து 324 இளைஞர்கள் தொழில் முனைவராக உருவாக்கப்பட்டுள்ளனர். இதன்மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் மூன்று லட்சம் நபர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற கடந்த 10 ஆண்டுகளில் 55 ஆயிரத்து 230 நபர்கள் மட்டுமே தொழில் முனைவோர்கள் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் முன்னோடி திட்டமாக தமிழக அரசால் கடந்த ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்காக தொடங்கப்பட்ட அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டம் மூலம் 159.40 கோடி மானியத்துடன் 302.86 கோடி வங்கி கடனுதவி வழங்கப்பட்டு 1369 தொழில் முனைவோர் உருவாக்கப்பட்டுள்ளனர்.பின் தங்கிய தென் மாவட்டங்களில் 262.13 கோடி மானியத்துடன் 769.27 கோடி வங்கி கடன் உதவியுடன் 9594 தொழில் முனைவோர் உருவாக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் தமிழகம் மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது. ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தொடங்கப்பட்டதில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது. உலக தொழில் முதலீட்டாளர் மாநாட்டை போல் வரும் பிப்ரவரி மாதம் தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உலக ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட உள்ளது.கடந்த 3 ஆண்டுகளில் தி.மு.க ஆட்சியில் சிறு குறு நிறுவன துறையில் தமிழக அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 170 ஸ்டார்ட் அப் நிறுவனம் தொடங்கப்பட்டு 69 கோடியே 15 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தில் மட்டும் 90 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் மூலம் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 8 சிட்கோ தொழில் பேட்டைகளில் 6 தொழில் பேட்டைகள் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் 8 சிட்கோ தொழிற்பேட்டைகள் புதிதாக இந்த ஆண்டு தொடங்கப்பட உள்ளது. புதிய தொழில் முனைவோரை உருவாக்குவதில் அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது.அதிகாரிகளை ஊக்குவித்து இளைஞர்களை புது தொழில் முனைவராக உருவாக்கும் நடவடிக்கைகள் நடந்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ. அன்பரசன் தெரிவித்தார்.

அப்போது நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல்வகாப் (பாளை)ரூபி மனோகரன் (நாங்குநேரி)

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் அர்ச்சனா பட் நாயக்.தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குனர் நிர்மல் ராஜ்,நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் கார்த்திகேயன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

வெற்றி பெற்றுள்ள 13 சதவீத பெண் உறுப்பினர்கள்

# நாடாளுமன்ற மக்களவையில் புயலை கிளப்புவார்கள்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் நம்பிக்கை!

சென்னை, ஜுலை 30-

வெற்றி பெற்றுள்ள 13 சதவீத பெண் உறுப்பினர்கள் மக்களவையில் புயலை கிளப்புவார்கள் என்று ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.



தலையங்கம்

தினத்தந்தி

29.7.2024 (திங்கட்கிழமை)

இவர்கள் புயலை கிளப்புவார்கள்!

இதுகுறித்து 29.07.2024 தேதிய ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

நீண்ட நெடுங்காலமாக அரசியல் அரங்கில், பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு கேட்டு போராடி வந்த நிலையில், கடந்த 17வது மக்களவையில் அதற்கான சட்ட மசோதா நிறைவேறியது. ஆனாலும் இன்னும் அமலுக்கு வரவில்லை. உறுப்பினர்கள் வெற்றி பெற்றுள்ளனர். இந்த 13 சதவீத பெண் உறுப்பினர்கள் தான் மக்களவையை அலங்கரிக்கப்போகிறார்கள்.

நாட்டிலுள்ள மொத்த வாக்காளர்களில் ஒட்டு போட்டவர்கள் 64 கோடியே 20 லட்சமாகும். இதில் பெண்கள் 31 கோடியே 20 லட்சம் பேர் அடங்குவார்கள். 48 சதவீதம் அளவுக்கு பெண்கள் ஓட்டுபோட்டும் 13 சதவீதத்திலான பெண்கள்தான் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. கடந்த மக்களவையில் 78 பேர் பெண்கள் இருந்த நிலையில், தற்போது 4 பேர் குறைந்திருப்பது வேதனையளிக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 74 பெண் உறுப்பினர்களில், பா.ஜனதாவை சேர்ந்த 32 பேரும், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 13 பேரும், திரிணாமுல் காங்கிரசை சேர்ந்த 11 பேரும், சமாஜ்வாடி கட்சியை சேர்ந்த 4 பேரும் அடங்குவார்கள். காங்கிரஸ் கட்சியில் மொத்தம் போட்டியிட்ட பெண்கள் 41 பேரில் 13 பேரும், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்ட பெண்கள் 12 பேரில் 11 பேரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாட்டை பொறுத்தமட்டில், தி.மு.க.வில் இருந்து கனிமொழி, தமிழச்சி தங்கபாண்டியன், ராணி ஸ்ரீகுமார் ஆகியோரும், காங்கிரஸ் கட்சியில் இருந்து ஜோதிமணி, வக்கீல் சுதா ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களும் சிறந்த பேச்சாற்றல் மிக்கவர்கள். இவர்களின் குரல் தமிழ்நாட்டு நலனுக்காக ஓங்கி ஒலிக்கும் என்ற நம்பிக்கை நிறையவே இருக்கிறது. தமிழக பெண் எம்.பி.க்களைப்போல, தேசியவாத காங்கிரஸ் உறுப்பினர் சுப்ரியா சுலே, ராஷ்டிரிய ஜனதா தள உறுப்பினரும் லாலு பிரசாத்தின் மகளுமான மிசா பாரதி ஆகியோரின் குரலும் மக்களவையில் ஒலிக்கப்போகிறது. சினிமா உலகில் இருந்து நடிகைகள் ஹேமமாலினி, கங்கனா ரனாவத் மட்டுமல்லாமல், மேற்கு வங்காளத்தில் திரிணாமுல் காங்கிரசில் இருந்தும் சில நடிகைகள் உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள்.

பெண் உறுப்பினர்கள் சமுதாயத்தின் பல மட்டங்களில் இருந்து வந்திருக்கிறார்கள். பெண் உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், நாட்டிலேயே இளம் எம்.பி.க்களாக 25 வயதில் ராஜஸ்தான் மாநிலம் பாரத்பூர் மக்களவை தொகுதியில் இருந்து சஞ்சனா ஜாதவ்வும், பீகார் மாநிலம் சமஸ்திபூர் தொகுதியில் இருந்து லோக் ஜனசக்தி கட்சியை சேர்ந்த சம்பவி சவுத்திரியும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் டாக்டர்கள் இருக்கிறார்கள், வக்கீல்கள் இருக்கிறார்கள், நடிகைகள் இருக்கிறார்கள், முதலீடு வங்கியாளர் இருக்கிறார். பேராசிரியை இருக்கிறார். பழுத்த அரசியல்வாதிகள் இருக்கிறார்கள்.

ஆக, நாடாளுமன்றத்தில் 13 சதவீதமே பெண்கள் இருந்தாலும், இந்த பெண் உறுப்பினர்கள் அனைத்து துறைகளிலும் கைதேர்ந்தவர்களாக இருப்பதால் விவாதங்களில் புயலை கிளப்புவார்கள். ஆக்கப்பூர்வமான வாதங்களை எடுத்துவைப்பார்கள் என்ற நம்பிக்கை நிறையவே இருக்கிறது. ஆனால், 33 சதவீதம் பெண்கள் இடஒதுக்கீடு மசோதா நிறைவேறியுள்ள நிலையில், அதை அமலுக்கு கொண்டுவந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். நாட்டில் 33 சதவீத காடுகள் இருந்தால், எப்படி பூமி செழிக்குமோ, அதுபோல் பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு நடைமுறைக்கு வந்தால் நாடு செழிக்கும். நாடாளுமன்றத்தில் ஒலிக்கப்போகும் பெண்கள் குரல், நாடு முழுவதும் உள்ள பெண்களின் நலனை போற்றி பாதுகாக்கும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘நீட்’ விலக்கு குறித்து - பேரவையில்

# கவன ஈர்ப்புத் தீர்மானம்!

## ஏ.எம்.எச்.நாஜிம் கடிதம்!

புதுச்சேரி, ஜுலை 30-

சட்டமன்றத்தில் நீட் விலக்கு தொடர்பானகவன ஈர்ப்புத் தீர்மானத்தை கொண்டுவர அனுமதி வழங்க வேண்டும் என்று புதுச்சேரி பேரவைத் தலைவருக்குதி.மு.க.ஏ.எம். எச்.நாஜிம் எம்.எல்.ஏ. கடிதம் எழுதியுள்ளார்.



மருத்துவக் கல்லூரியில் மாணவர்கள் சேருவதற்கு தடையாக ‘நீட்’ நுழைவுத் தேர்வு உள்ளதால் அது குறித்து புதுச்சேரி சட்டப் பேரவையில் விவாதிக்க வேண்டும் என்று பலமுறை முயற்சித்தும் முடியாத காரணத்தால், நாளை தொடங்க இருக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வர வேண்டும்என்றுபேரவைத் தலைவருக்கு கழக உறுப்பினர் ஏ.எம்.எச். நாஜிம் நேற்று கடிதம் எழுதியுள்ளார்.